தமிழ் வாழ்க !

தமிழ்ப் பொழில்

துணர் 54

இரௌத்திரி ஆண்டு

(1980 - 1981)

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

தஞ்சை.

—: பொழிற்றொண்டர் :—

திரு. அரங்க. வே. சுப்பிரமணியன், பி. ஏ.

—: உள்ளுறை :—

இரௌத்திரி ஆண்டு மலர்கள்: க-கஉ

துணர் 54 பக்கம்

1 அங்கதப்பாட்டு ஆராய்ச்சி (வேண்டுகோள்) ... 20
முன்னவர் சாலை இளந்திரையன்

2 அபிராமி சமயம் ... 14, 31
திரு க. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

3 ஆசிரியர்—மாணவர் ஆய்வுக் கருத்தரங்கு ... 184
சென்னைப்பல்கலைக் கழகம்

4 ஆய்தம் என்னும் முப்பாற் புள்ளி ... 39, 51, 75
பேராசிரியர் திரு ச. பாலசுந்தரம்

5 ஆற்றுப்படை இலக்கியம் ... 109, 139, 157
திரு க. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்

6 இரங்கற் கூட்டம் ... 257
ஔவை சு. துரைசாமி பிள்ளை மறைவுக் குறித்து

7 இளங்கோவடிகள் தமிழ்க் கழகம் 136
தொடக்க விழா

8 ஈரொற்றுடனிலை ... 237
டாக்டர் ஏ. ஆதித்தன்

9 உந்து புறநானூற்றில் மட்டுந்தானா? ... 8
டாக்டர் ஏ. ஆதித்தன்

10 ஊழிற் பெருவலி யாவுள ... 60
திரு கோ. பஞ்சாபகேசன்

11 எழுது கருவிகள் ... 179
திரு அ. ம. சத்தியமூர்த்தி, எம். ஏ., எம். ஃபில்.

12 கடைச்சங்கம் : கால ஆராய்ச்சி ... 71, 86
பூரண சந்திர ஜீவா (எம். ஏ.)

13 கவிஞன் நோக்கு ... 243, 251
தஞ்சை பா. இறையரசன்

14 குற்றியலுகரம் ... 11
பேராசிரியர் திரு ச. பாலசுந்தரம்

15 'குற்றிளையர்' ... 25
நெல்லை திரு ந. சொக்கலிங்கம், எம். ஏ., டி. ஜி. டி.

16 கையறவு ... 47, 172

17 சிலம்பியம் ... 192, 207
திரு சி. கோ. தெய்வநாயகம் எம். ஏ., எம். ஃபில்.,

18 சிலம்பு தரும் அடைகள் ... 245
புலவர் திரு ம. இலக்குமிநாராயணன், எம். ஏ., பி. டி.,

19 செந்தமிழின் தெய்வத் தன்மை ... 2
திரு தி. கோ. பஞ்சாபகேசன்

20 தமிழ்க் கொலை செய்யாதீர் ... 21
திருத்துறைக்கிழார்

21 தாமோதரம் பிள்ளை, சீ. வை. திரு ... 132
திரு சிறுவை நச்சினார்க்கினியன்

22 தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியின் வளர்ச்சி ... 99
திரு அ. ம. சத்தியமூர்த்தி, எம். ஏ., எம்ஃபில்

23 தொல்காப்பியமும் நடையியலும் ... 173
திரு பா. வீரப்பன், எம். ஏ., எம். ஃபில்.,

24 தொல்காப்பிய மெய்ம்மயக்க மரபுகள் ... 125, 163, 197, 228
பேராசிரியர் திரு ச. பாலசுந்தரம்

25 தொல்காப்பியரும் பெயரெச்ச உறவு நிலையும் ... 36
டாக்டர் ஏ. ஆதித்தன்

26 நாட்டுப்புறக் கதைகள்—ஒருவரையறை ... 260
திரு அ. ம. சத்தியமூர்த்தி, எம். ஏ., எம். ஃபில்

27 பரிப்பெருமான்—ஒரு மதிப்பீடு ... 211
பேராசிரியர் திரு கு. சிவஞானம், எம். ஏ.

28 பல்கலைச் செல்வர். தெ. பொ. மீ. ... 151
சிறுவை நச்சினார்க்கினியன்

29 பாட்டியல்—ஒரு நோக்கு ... 4
திரு அ. ம. சத்தியமூர்த்தி, எம். ஏ., எம். ஃபில்

30 பாண்டிய நாட்டுச் செப்பேடுகளில்
விண்ணப்பங்கள் ... 213
திரு கு. அழகேசன்

31 பாரதி ஒரு திருப்புமுனை : ... 221
திரு ம. மதியழகன், எம். ஏ., எம். ஃபில்.,

32 பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் ... 219
திரு தி. கோ. பஞ்சாபகேசன்

33 புத்தாண்டு வாழ்த்து ... 1

34 மக்கள் மொழி ... 62
திரு வி. பொ. பழனிவேலனார்

35 மங்கல மடந்தை—
கண்ணகி ... 65, 95, 114, 143, 149
திரு சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்

36 மயிலை திரு சீனி வேங்கடசாமி மறைவு ... 57
சிறுவை மோகனசுந்தரன்

37 முற்றுப் பெயரெச்சமும்
முற்று வினையெச்சமும் ... 105
டாக்டர் ஏ. ஆதித்தன்

---o---

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருச	திருவள்ளுவர் யாண்டு உ௰கக இரௌத்திரி சித்திரை 1980 ஏப்ரல் - மே	மலர் க

புத்தாண்டு வருக! சித்திரை வருக!!

உருத்திரன் ஆற்றலாய் ஒளிரும் திருத்தகு
ரௌத்திரி என்னும் பவித்திர நங்காய்!
வருக! இவ்வுலகம் வாழ்வுபெற் றோங்கப்
பெருகுக நின்னருள்! அருகுக வறுமை!
நிலவளம் பூக்கத் தொழில்வளம் ஓங்கக்
கலைவளங் கூரப் புலமுறு கல்வித்
துறைவளங் கொள்ள அறப்பணி தழைக்கப்
போரும் பூசலும் பொய்யும் கரவும்
நேரா தொழியநின் நெஞ்சங் கனிந்தே
அருள்தர வருக! அம்மையே வணங்குதும்
இருள்கெடுத் தொளிதர இரவுத்திரி என்னும்
புத்தாண்டு நல்கும் சித்திரை மகளே!
வருக! வருக! மன்னுயி ரெல்லாம்
முருகிய உவகை மூண்டிட வருக!
திணைவளங் கூர வினைநலம் செழிக்கத்
தமிழ்மொழி ஓங்க அமிழ்துவான் பொழிய
இமிழ்கடல் உலகம் இன்பமுற் றொளிர
வருக அருள்கென! வாழ்த்தி
வணங்குதும் அணங்கே வருக வாழியே!

தமிழ்ப்பொழில்

செந்தமிழின் தெய்வத்தன்மை

ஸ்ரீ. கோ. பஞ்சாபகேசன்,
" திருவருளகம் "
59, வடக்குப்பெருந் தெரு, திருவிடைமருதூர்.

உலகின் கண் வழங்கும் பல்வேறு மொழிகளுள் நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியும் ஒன்ருகும். இது செம்மைப் பண்பை யடுத்துச் செந்தமிழ் என வழங்குகின்றது பல சான்ரோர்களால் இலக்கண வரம்பு செய்து திருத்தமுற்றமையின் செம்மைத் தன்மை இம்மொழிக்கு இயல்பாயமைந்தது. இவ்வுயர் தனிச் செம்மொழி தெய்வத் தன்மை வாய்ந்தது; மிகப் பழமையானது. இனிமை நிறைந்தது, மிக அழகாயது, பல அருளாளர்களாற் பயிலப் பெற்றது; அனேக அற்புத செயல்கட்கு இடமுய்து, இலக்கண இலக்கிய நூற்பெருக்கமுடையது, உயிர்க்குறுதி பயக்கும் அறமாகிய உண்மைப் பொருளை நுவல்வது. இத்தகு சிறப்புடைய இம்மொழி யினது தெய்வத்தன்மையைப்பற்றிச் சிறிது சிந்திப்பாம்.

" ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் ".

" செந்தமிழோடாரியனை "என்பனவாதிய தேவாரத்தாலும், பிறவாற்ருலும் இம்மொழியே சிவசொருபமாய் விளங்குகின்றது என்பது புலனும். ஆதிகாலத்தே இவ்வுயர்மொழியை அகத்திய முனிவருக்கு உணர்த்தியருளியவர் மாதொருபாகனுகிய சிவபெருமானும், திருமுருகக் கடவுளுமென்பர்.

ஒரு காலத்தில் பாண்டிய நாட்டிலுண்டான கொடும்பஞ்சத்தால் ஆங்கிருந்த சங்கப் புலவர்கள் சிதறுண்டுபோய், பஞ்சம் தெளிந்த பின் ஆங்கடைய அவர்களிடமிருந்த தொல்காப்பிய அகத்திணைப் பகுதி அவர்கள் கைதவறிவிட்டது. அப்பகுதியின் இன்றியமையாமையைக் கருதிப் பாண்டியனும் 'புலவரும் வருந்தாநிற்க, சொக்கலிங்கப் பெருமான் ஒருலவராய்த்தோன்றி, " அன்பின் ஐந்திணை " என்பது முதலாக அறுபது சூத்திரங்களடங்கிய ஓர் நூலைக் கொடுத்து மறைந்தருளினர். இதனை,

" உலகியல் நிறுத்தும் பொருள் மரபொடுங்க மாறனும் புலவரும் மயங்குறுகாலை, முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால், " அன்பினைந் திணை " யென்று அறுபது சூத்திரம், கடலமுதெடுத்துக் கரையில் வைத்ததுபோல், பரப்பின் தமிழ்ச்சுவை திரட்டி, மற்றவர்க்குத் தெளிதரக் கொடுத்ததென் தமிழ்க் கடவுள் " எனக் கல்லாடத்தாலும்,

"திருவாலவாய்ச் செழுஞ்சுடரைச் செழும்
பொருணூல் தருவானை" என்னும் அருண்மொழித்

தேவர் திருவாக்கானும் நன்கு தெளியலாம். இறைவன் அருளிய அந்நூலுக்குச் சங்கப் புலவர்கள் பலரும் உரைசெய்து அரங்கேற்றுந் தருவாயில், குமாரக் கடவுள் அம்சமாயவதரித்த உருத்திரசன்மர் அவைக்களத்துத் தலைமைவீற்றிருந்து அவர்கள் உரையில் நக்கீர ருரையே சாலச் சிறந்தது எனத் தெளிவுபடுத்தினர்.

"மணிக்கால் அறிஞர் பெருங்குடித் தோன்றி இறையோன் பொருட்குப் பரணர் முதல் கேட்பப் பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும். பாய் பாரறிய நீயே" என்ற கல்லாடம் இக்கூற்றை இனிது புலப்படுத்தும். கடவுளர்களாகிய இறையனார், உக்கிரப் பெருவழுதியார் முதலியோர்களே சங்கப் புலவர்களாயிருந்து ஆராயப் பெற்றது நந் தமிழ் மொழியே. மேலும், முழுமுதற் கடவு ளாகிய சிவபெருமானால், "கொங்குதேர் வாழ்க்கை" "அடியார்க் கௌியவன் சிற்றம்பலவன்" என்பனவாதிய சீட்டுக் கவிகள் எழுதப்பெற்றது நம் செந்தமிழே. மற்றும். "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கும், "உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்" எனச் சேக்கிழார் சுவாமி களுக்கும் பரமசிவனார் முதலடியெடுத்துக் கொடுக்கப் பெற்றதும் நமது அருமைத் தமிழ்மொழியே. இன்னோரன்ன அளவிறந்த எடுத் துக்காட்டுக்களால், நமது தாய்மொழியும் தனிமொழியும் ஆகிய தமிழ் மொழி தெய்வத் தன்மை வாய்ந்ததென உறுதியாக நிறுவப் பெறும். இத்தெய்வ மொழியை வரன் முறையாக ஆராயாத குறைவால் ஒரு சிலர் இதனைப் புறக்கணித்துப் பேசுவாராயினர்.

"எல்லாப் பொருள்களும் இதன்பாலுள விதன்பா, லில்லாத தொன்றில்லை" என்றபடி சொற்பொருட் சிறப்புற்று மிளிருவதும் நம் நற்றமிழ் மொழியே. ஆதலின், ஒரொரு காலத்தில் வளர்தல் சுருங்குதலையுடைய பிறமொழிகளைப் போலாது, என்றும் ஒருபடித் தாய் விளங்கும் நமது தாய்மொழியிற் பற்றுமிக்குடையராய் அதனை மேன்மேலும் பயிலவும், உலகெங்கணும் பரப்பவும் முற்படு வோமாக!

"ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர்ஞாலத் திருள்கடியும் — ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது
தன்னேரிலாத தமிழ்" — தண்டியாசிரியர்.

"பாட்டியல் - ஒரு நோக்கு"

அ. ம. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.ஃபில்.,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாறு.

முன்னுரை :

பாட்டின் இயல்பை 'இலக்கணத்தைக் கூறுவது பாட்டியல் எனப்படும். அதாவது பாட்டின் வகை, அதன் இலக்கணம், அமைய வேண்டிய முதன்மொழிப் பொருத்தம் முதலியன பற்றி விளக்கி நிற்பவை பாட்டியல் நூல்கள். இப்பாட்டியல் இலக்கணத்தின் தோற்றம், வளர்ச்சி, பொருளமைதி முதலியனவற்றை ஓரளவு சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பாட்டியல் — விளக்கம் :

தொல்காப்பியர் காலத்தில் செய்யப்பட்டது அனைத்தும் செய்யுள் எனப்பட்டது. அதாவது செய்யுள் என்பது இலக்கியத்தை உணர்த்தும் பொதுச் சொல்லாக அமைந்தது. செய்யுளியல் என்ற பகுப்பு இதனை உணர்த்தும்.

இச்செய்யுளின் உறுப்பாகத் தொல்காப்பியர் கூறும் முப்பத்தி நான்கினுள் (1) அடங்கியதே 'யாப்பு', 'பா' என்னும் உறுப்புக்களாகும். எனவே யாப்பு, பாட்டு என்ற இரண்டும் தொல்காப்பியர் காலத்தில் வெவ்வேறாக உணரப்பட்டு வந்தமை விளங்கும். ஆகையால் 'பாட்டியல் செய்யுளியலிலிருந்து மாறுபட்டமைவது' (2) என்பதைவிட, செய்யுளியலின் ஒரு பகுதி என்பது விளங்கும்.

மேலும் யாப்பியலினின்று பாட்டியல் கிளைத்தெழத் தொடங்கியது (3) என்ற கூற்றும் அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை எனலாம். எவ்வாறெனில், தொல்காப்பியர் காலத்தில் யாப்பும் பாட்டும் வேறுபட்டு விளங்கியதை மேலே கண்டோம். அடுத்து யாப்பு என்பது புறவடிவத்தைப் பற்றியது என்றும், பாட்டியல் என்பது பாட்டின் பொருண்மைக்கும், படைப்புக்கும், பகுப்புக்கும், வகைக்கும் இலக்கணம் கூறுவது என்றும் பின்னர் காண இருக்கிறோம். எனவே யாப்பு பாட்டு என்பன வேறுபட்டவை என்பது தெளிவு.

இந்தப் பாவினைத் தொல்காப்பியர்,

'நாலியற் றென்ப பாவகை விரியே' (4)

என விரித்துக் கூறுகிறார். அந்தப் பாக்கள் ஆசிரியம், வெண்பா, வஞ்சி, கலி என நால்வகைப்படும். இந்தப் பாவிற்கு விளக்கம் கூறவந்த பேராசிரியர் 'பரந்துபட்டு செல்வதோர் ஓசை' என்றார். இம்மரபைப் பின்பற்றி வளர்ச்சி பெற்று அமைந்த பாட்டு வகைகளுக்கு இலக்கணம் கூறுவதே பாட்டியல் நூல்கள்.

யாப்பும் பாட்டும் :

யாப்பு நூல்கள் இலக்கியப் புறவடிவுக்கும் பாட்டியல் நூல்கள் பொருண்மைக்கும, இலக்கியப் படைப்புக்கும், பாட்டுவகைப் பகுப்புக்கும், முதன்மை கொடுக்கின்றன (5) என்பது பொருத்தமான ஒப்புநோக்கு விளக்கமாகும்.

யாப்பு நூல்கள் மரபு வழியில் அமைய, பாட்டியல் நூல்கள் மரபிலிருந்து மாறுபட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவதையும் காணலாம். இவ்வாறு ஒரு எண்ணத்தை ஏற்படுத்தக் காரணம் அவை கூறும் பொருத்த இலக்கணமே ஆகும். இப்பொருத்தங்கள் பற்றிய செய்திகளை நோக்க, பிற நாட்டாரது பண்பாட்டுத் தாக்கம் தமிழகத்தில் எவ்வளவிற்கு இடம் பெற்றிருந்தது என்பது விளங்குகிறது. மற்றபடி அவை கூறும் பிரபந்த இலக்கணங்களில் சில தொல்காப்பியர் காலத்திலேயே காணப்படுகின்றன. இதற்கு ஆதாரமாகத் தொல்காப்பியர் காலத்தில் விளங்கிய நாற்பத்திரண்டு இலக்கிய வகைகளைப் பற்றிப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை சுட்டுவதைக் (6) காட்டலாம்.

பாட்டியல் காட்டும் பொருளமைதி :

பாட்டியல் காட்டும் செய்திகளை இருவகையாக்கலாம். அவற்றுள் ஒரு பிரிவு செய்யுளின் முதன்மொழிப் பொருத்தம் கூறுவது. மற்றொரு பிரிவு இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறுவது. இவ்விரண்டற்கும் ஒழிபாக, பின் இணைப்பாக பாடல் ஆசிரியன், பாடல் தலைவன், பாடும் முறை அரங்கேற்றம், அவையோர், பாவருணம் முதலியன பற்றிய செய்திகளும் அமைகின்றன.

சில பாட்டியல் நூல்கள் செய்யுளியல் கருத்தையும் இணைத்துத் தருகின்றன. இதற்குச் சான்றாகச் சிதம்பரப் பாட்டியலைக் காட்டலாம்.

வரையறுத்த பாட்டியல் (சம்பந்தப் பாட்டியல்) மங்கலப் பொருத்தம் ஒன்றையே வற்புறுத்தி உரைக்கிறது.

பாட்டியல் நூல்கள் அனைத்திலும் பொருத்தம் கூறுவது பெரும் பாலும் பொது மரபாகக் காணப்படுகிறது. இரண்டாவது பகுதி யில்தான் காலநிலை வளர்ச்சிக்கேற்ப அவை கூறும் செய்திகளிலும் வளர்ச்சி நிலை மறைந்தநிலை முதலியன காணப்படுகின்றன. அவ் விரண்டாம் பகுதியில் சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறப்படு கிறது என்பது பொதுக்கருத்து. ஆயினும் இலக்கியங்களுக்கு இலக் கணம் கூறுவதே பாட்டியல் நூலார் நோக்கம் என்ற கருத்தும் இருந்துவரக் காணலாம். இக்கருத்தைப் பிரபந்தம் என்ற சொல் உணர்த்தும் பொருளே வற்புறுத்தும்.

பிரபந்தம் என்ற சொல்லுக்கு நன்கு கட்டப்பட்ட நூல் என்பதே பொருள். எனவே பிரபந்தம் என்னும் சொல் பொதுநிலையில் இலக்கியம் என்னும் பொருளை உணர்த்துவது தெளிவு.

மேலும் பாட்டியல் நூல்கள் காப்பியம், புராணம், பெருங்காப்பி யம் ஆகிய இலக்கியங்கட்கும் இலக்கணம் கூறக் காணலாம். இதற்கு வெண்பாப் பாட்டியலிலிருந்து சான்று காட்டலாம். (7) இக்காரணத்தைக் கொண்டும் பாட்டியல் நூல்களின் நோக்கம் இலக்கியங்களின் இலக்கணம் உரைப்பதேயன்றி. சிற்றிலக்கியங்க ளின் இலக்கணம் மட்டும் உரைப்பது அல்ல என்பது தெளிவு.

இப்பாட்டியல் நூல்கள் காட்டும் இலக்கிய வகைகளும் காலத் திற்குக் காலம் மாறுபட்டு அமைகின்றன. பன்னிரு பாட்டியலில் 62 இலக்கிய வகைகள் பற்றியும், வெண்பா பாட்டியலில் 55 இலக் கிய வகைகள் பற்றியும், நவநீதப் பாட்டியலில் 53 இலக்கிய வகை கள் பற்றியும், சிதம்பரப் பாட்டியலில் 63 இலக்கிய வகைகள் பற்றி யும். இலக்கண விளக்கப் பாட்டியலில் 63 இலக்கிய வகைகள் பற்றி யும், முத்துவீரியப் பாட்டியலில் 90 இலக்கிய வகைகள் பற்றியும், பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் முதலாயவற்றில் 96 இலக்கிய வகைகள் பற்றியும் இலக் கணங்கள் கூறப்பட்டுள்ளன. (8)

இவ்வாறு இலக்கிய வகைகளின் எண்ணிக்கை மாறுபட்டமை வதை நோக்க, காலத்திற்கேற்ப அவற்றின்கண் ஏற்பட்ட வளர்ச்சி நிலை விளங்கும்

இவ்வகையில் பாட்டியல் நூல்கள் காட்டும் பொருளமைதி யிருக்க, சிதம்பரப் பாட்டியல் முற்பகுதியில் யாப்பிலக்கணமும் கூறி நிற்கிறது.

முடிவுரை :

எனவே இதுகாறும் பாட்டியல் என்பது இலக்கிய இயல் என்றும், யாப்பியல் பாட்டியல் இரண்டும் வெவ்வேறாகவே தொல்காப்பியர் காலத்திலிருந்து உணரப்பட்டு வந்தன என்றும் உணர்த்தினேம். மேலும் பாட்டியல் காட்டும் பொருளமைதி பற்றியும் ஓரளவு சுருங்கக் கண்டோம்.

அடிக்குறிப்புகள்

1 தொல்காப்பியர், தொல் - பொருள் - செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, கழகம், சென்னை, 1965, நூ - 1

2 சுப்பிரமணியன் டாக்டர் ச. வே., இலக்கணத் தொகை - யாப்பு - பாட்டியல், தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, 1978, ப-ம் 333.

3 செயராமன் டாக்டர் ந. வீ., பாட்டியல் திறனாய்வு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977, ப - ம் - 10.

4 தொல்காப்பியர், தொல் - பொருள் - செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, கழகம், சென்னை, 1965, நூ - 105.

5 அன்னி தாமஸ், 'யாப்பு - பாட்டியல்', தமிழ் இலக்கியக் கொள்கை - தொகுதி 2, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு, 1977, ப - ம் 142.

6 நவநீத நடன், நவநீதப் பாட்டியல், எஸ். வையாபுரிப் பிள்ளை [பதிப்] — — — —, ப - ம் 119 - 120,

7 வச்சணந்தி முனிவர், வெண்பாப் பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும், கழகம், சென்னை, மூன்றும் பதிப்பு, 1951, நூ - 40 முதல் 43.

8 செயராமன் டாக்டர் ந. வீ., பாட்டியல் திறனாய்வு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977, ப - ம் 16 - 17,

---

* 'உந்து புறநானூற்றில் மட்டுந்தானு ?'

டாக்டர். ஏ. ஆதித்தன்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

தொல்காப்பியனர் இடையியலின்கண் பல்வேறுவகையான இடைச்சொற்களைத் தொகுத்துக் கூறுமிடத்து 'உம்மின் திரிபாகிய 'உந்து' எனும் வடிவத்தைச் சுட்டுகின்ருர். (1) சங்க இலக்கியங்களில் ஒன்ருன புறநானூற்றில் மட்டும்தான் இவ்வுந்தீற்றுச் சொற்கள் காணப்படுவதாகச் சுட்டப்படும் இலக்கண மரபு நம்மிடையே உண்டு. ஆனல் பதினெண்கீழ்க்கணக்கினைச் சார்ந்ததா அன்றி பதினெண் கீழ்க்கணக்கினைச் சாராததா என்ற கருத்து வேறுபாட்டிற்கு உட்படுத்தப்பட்ட 'இன்னிலை' எனும் இலக்கியத்தில் உந்தீற்று வினைவடிவம் கையாளப்பட்டுள்ளமையினைக் காணமுடிகின்றது. இன்னிலையில் காணப்பெறும் உந்தீற்று வினையினை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

உம் உந்தாகும் இடனுமாருண்டே (தொல்காப்பியம்,
சொல்லதிகாரம் : 292)

ஈண்டு குறிப்பிடப்பட்டுள்ள இத்தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் அனைவரும் புறநானூற்றிலிருந்தே சான்றுகள் தருகின்றனர். சேனவரையரும், நச்சினர்க்கினியரும் 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் இறுதி உம்மே உந்தாகத் திரிந்துள்ளதெனக் கருதுகின்றனர் (2)

புறநானூற்றின் பழைய உரையிலும் இத்தகைய வினைவடிவங்கள் அனைத்தும் பெயரெச்சமாகச் செயல்படுவனவாகச் சுட்டப்பட்டுள்ளமையினை அறிய முடிகிறது. தொல்காப்பியமும் இவ்வுந்தினை முற்று அல்லது எச்சத்தின் ஈருய் வரும் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இவர் எண்ணுப் பொருண்மையில் வரும் 'உம்' எனும் வடிவந்தான் 'உந்து' எனத் திரிந்துள்ளதென கருதியுள்ளார் என்று கொள்ள இடமுண்டு. எனவேதான் உம்மின் திரிபுகூறும் நூற்பாவினை வினையியலில் அமைக்காது இடையியலின்கண் அமைத்துள்ளார் என்று கூறப்பெறும் கருத்து முறையானதாகத்தென்படுகின்றது. பிற்கால இலக்கணியான பவணந்தி முனிவர் 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் ஈருகிய 'உம்' எனும் வடிவந்தான் 'உந்து' எனத் திரிந்துள்ளது என்று வெளிப்படையாகச் சுட்டியுள்ளார். (4)

இவ்வுந்தீற்று வினைகள் பற்றி பிற்கால இலக்கண மொழியியல் அறிஞர்கள் பலர் தம்மிடை முரண்படும் சிலகருத்துக்களைத் தெரிவித்

துள்ளனர். கே. என். சிவராஜ பிள்ளை 'உந்து' என்னும் வடிவம் 'உம்' என்னும் வடிவத்திலிருந்து உருவாகியது அல்ல என்றும் இது 'அந்த', 'இந்த' போன்ற சுட்டு வடிவங்களைப் போன்று ஒரு முழுச்சொல் என்றும் குறிப்பிட்டு, நிகழ்காலத்தின்கண்ணே இவை வினையோடு பயன்படுத்தப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுகின்றார். மேலும் இவர் புறநானூற்றில் காணப்படும் உந்தீற்று வினைகளை மலையாள மொழியின்காணப்படும் 'செய்யுந்து' அனைய வடிவங்களோடு ஒப்பிட்டு இவை பயனிலைகளாகச் செயல்படும் நிலையினைச் சுட்டுகிறார். (5) டாக்டர் மு. வரதராசன் இவ்வுந்து வடிவம் 'உம்', 'து' ஆகிய இரண்டனது சேர்க்கையே என்று குறிப்பிடுகின்றார். (6) டாக்டர் மோ. இசரயேல் புறநானூற்றில் காணப்படும் உந்தீற்று வினைகளை அஃறிணை ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்களைக் குறிக்கின்றார். (7) டாக்டர் கோதண்டராமன் 'செய்யுந்து'என்னும் வடிவம் கிடைக்கப் பெற்றுள்ளதெனக் கூறுகின்றார். (8) இனி இந்நிலையின்கண் காணப்பெறும் உந்தீற்றுத் வினையின் பயனிலைப் பாட்டினைக் காணலாம்.

புறநானூற்றில் காணப்பெறும் உந்தீற்று வினைகளெல்லாம் அடுக்கிவர சங்ககாலத்திற்குப் பிற்பட்டதாகக் கருதப்படும் இன்னிலையில் இவ்வீற்றுவினை தனித்து வருதலைக் காணமுடிகின்றது.

> ஒன்றுண்டே மற்றுடலிற் பற்றி வினையிறுக்கும்
> பொன்று உணர்வால் விலங்கொறுக்க பைம்மறியாத்
> தன்பாற் பெயர்க்குந்து பற்று தலைப்பட்டோர்
> நுன்பால் அறிந்தார் துறந்தார் வாலுய்ந்தார்
> புன்பாலாற் சற்றப்படார்
>
> (இனிநிலை : 45)

இப்பாடலில் 'பெயர்க்குந்து' என்னும் வடிவம் பெயரெச்சமாக செயல்பட்டு உரையாசிரியர் கருதுவதனைப் போன்று 'பற்று தலைப்பட்டோர் என்பதனையே தன் அண்மைவுறுப்பாக ஏற்று வருகின்றது. இவ்வுந்தீற்று வடிவத்தினை புறநானூற்றில் வரும் வடிவங்களை அறிஞர்கள் குறிப்பிட்டது போன்று வினைமுற்றாகவோ இல்லையேல் வினையாலணையும் பெயராகவோ கருத முடியாது; பெயரெச்சமாகக் கொண்டால் மட்டுமே பொருட் தொடர்பு சிதைவதில்லை.

இதனை அடிப்படையாகக் கொண்டு புறநானூற்றில் காணப்பெறும் இத்தன்மையாய வடிவங்களின் பயனிலைப் பாட்டினை மாற்றியமைக்க முடியுமா? அன்றியும் இன்னிலையின் காலத்தையும்

முந்தை இலக்கியங்களோடு தொடர்புபடுத்தலாமா ? இவை மேலும் ஆய்வுக்குரியன என்பதில் ஐயமில்லை.

குறிப்புக்கள்

1 தொல்காப்பியம், சொல்லதிகாரம்—சேனாவரையம்: 249.

2 தொல்காப்பியம், சொல்லதிகாரம்—சேனாவரையம்: 292.

3 சேனாவரையர், தொல்காப்பிய சொல்லதிகார உரை: 292
நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சொல்லதிகார உரை: 294

4 நன்னூல்,

5 கே. என். சிவராஜ பிள்ளை, உந்து என்னும் இடைச்சொற் பிரயோகம். பக் 46 — 50.

6 மு. வரதராசன், மொழியியற் கட்டுரைகள், பக். 213, 215,

7 மோ. இசரயேல் 'உந்தீன்று வினைகள்' இடையும் உரியும், பக்.

8 இரா. கோதண்டராமன், 'திராவிட மொழிகளில் செய்யுந்து வினைகள்', செந்தமிழ் செல்வி: 47 : (197), பக்.

6 பதினெண்கீழ்க் கணக்கோடு ஒப்பிட்டு நிகழ்த்தப்பெறும் மொழியாராய்ச்சி இலக்கிய வரலாற்றில் இன்னிலையின் இடத்தினை வரையறை செய்வதற்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

---

* இக்கட்டுரை நன்முறையில் அமைய பல்லாற்றானும் உதவி புரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர் மோ. இசரயேல் அவர்களுக்கும், தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் டாக்டர் ஜெக. நீதிவாணன் அவர்களுக்கும் நன்றி உரித்தாக்குக.

குற்றியலுகரம்

பேராசிரியர். ச, பாலசுந்தரம் க. பு. கல்லூரி.

(துணர்: 53 மலர்: 220 ம் பக்கத்தொடர்ச்சி)

இனி இக்கால மொழியியல் அடிப்படையில் அளவு, களவு, கனவு முதலாய சொற்களை ஆராய்ந்து இவை உயிர்வரும் வழி எய்தும் நிலையைப்பற்றித் திரு. ந. குமாரசாமி ராஜா அவர்கள் '' குற்றுயிர்கொண்ட ஒரசையன்றி யாதானுமொரு தொடர்மொழிக் குப்பின் வருமாயின் அதன் இறுதி உகரம் குற்றியலுகரமாகும் '' என்றும், அது பகரத்தை ஊர்ந்து அருகிவரும், பகரம் பெரும் பாலான சொற்களில் வகரமாகத் திரிந்து வரும், வரினும் அவ்வக ரத்தை ஊர்ந்து வரும் உகரம் குற்றியலுகர மென்றே கொள்ளத் தகும் என்றுகூறி, அழிவு, அளவு, இயல்பு, உயர்பு முதலாய இருபத்தேழு சொற்களை எடுத்துக்காட்டி இவை அழிவு, அளவு, இயல்வு, உயர்வு எனத் திரிந்து வரும்; வரினும் குற்றியலுகரமே என வரைந்துள்ளமை தொல்காப்பியர் கருத்துக்கியையு மாறில்லை

அடுத்து, குற்றியலுகரத்தைப்பற்றி மிக விரித்து ஆய்ந்தெழுதிய இரெட்டியாரவர்கள் குற்றியலுகரம் இயல்பில் மெய்யீறே எனக் கூறி முடிப்பர்.

ஆசிரியர் தொல்காப்பியனுர் இக்குற்றியலுகரம் உயிருமாகாது மெய்யுமாகாது என்பதனைனன்ரே சார்பெழுத்து எனப் பெயர்தந்து பிரித்துக்கூறி, மொழி மரபின்கண் இதன் இயல்புகளைத் விரித்துக் கூறி இதன் புணர்ச்சிநிலைகளைத் தனியே ஒரியலின்கண் அமைத்துக் கூறினுர். இவற்றையெல்லாம் மறந்து இவ்வாறு உயிரா—மெய்யா என ஆராய்வது இப்பேடி ஆடவனு? மகளா ?என்று வினவி ஆட வனே என்றும், அல்லள் மகளே என்றும் நியமிக்க முற்படுவாரின் ஆய்வினை ஒப்பதாகும்.

எனினும் உயிரது குறுக்கமும் உயிரேயாம் எனமுன்னை உரை யாசிரியர்கள் கூறியுள்ளமையின் அதனைப் பிழையெனக் கூறவந்த வர் இது மெய்யீறே என விளக்கினுர் போலும். மெய்யீறு என்ப தற்கு இவர் கூறும் நியாயங்கள் பின்வருமாறு.

'' உச்சகாரம் இருமொழிக் குரித்தே ''

" உப்பகாரம் ஒன்றென மொழிப " என்பனவற்ருல் முற்றுகர ஈறுகளையே ஆசிரியர் உயிரீருக எண்ணியுள்ளார் என்பதும்,

" மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல் "

" குற்றியலுகரமும் அற்றென மொழிப " என

ஆசிரியர் மெய்யெழுத்தோடு மாட்டெறிந்து கூறியுள்ளார் என்பதும்'

வல்லின மெய்யீறுகளை முடித்தற் பொருட்டு இது விடுப்பொலியாக மெய்யைப் போல் அரை மாத்திரையளவாய் வருகின்றது என்பதும் ஆகும்.

இவற்றுள் முற்றுகர ஈற்றுச் சொற்களை வரைந்து கூறியதன் காரணத்தை மேலே விளக்கியுள்ளேன். அதனுல் குற்றுகரம் மெய்யீறு என்பதற்கு இவை சான்ருகமாட்டா. அடுத்து மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்-குற்றியலுகரமும் அற்றென மொழிப" என்ற மாட்டேறு புணருமிடத்து மெய்யீறுபோல உயிரேற இடங் கொடுக்கும் என்பதன்றி இது மெய்யெழுத்தாகும் என்பதன்று. ஆசிரியர் கருத்து அதுவாஞல் இதனை நூன் மரபின்கண் கூறியிருப்பார், அடுத்து வல்லினமெய் ஈறுகளை முடிக்க வரும் விடுப்பொலியாதலின் மெய்யெழுத்தியல்பாகும் எனில் ஏனை இடையின மென்லின மெய்களை, சொல்லு - பாரு, நெல்லு, கொள்ளு, உரிஞு - வெரிஞு என முடிக்கவரும் முற்றுகரத்தையும் மெய்யெழுத் தெனக் கோடல் வேண்டும். இவற்றைக் குற்றுகரமாகவும் கொள்ளலாம் என்பது அவர் கருத்து இதனுற் பயன் யாதென்று புலப்படவில்லை.

ஆகவே அவர் கூறும் நியாயங்கள் ஏற்புடையவாக வில்லை. மற்றும் செய்யுட்கண் இடையேவரும் சேர்ப்பு-மாண்பு-உல்கு முதலியன தேமாவாகவும் பிழப்பு—கடப்பு உறைப்பு பரப்பு முதலியன புளிமாவாகவும் அசைபெற்றுச் சீராக நிறைதலின் குற்றியலுகரத்தை மெய்யெனக் கொள்வது பொருந்நாது. இது வருமிடனும் தருபொருளும் பற்றி உயிர் போலவும் மெய் போலவும் நிற்கும் சார்பெழுத்து எனக் கோடலே இயல்பும் சால்பும் ஆகும் என்க.

இக்குற்றியலுகரம் பற்றிப் பின் எழுந்த இலக்கண நூலார் கூறுவன.

வன்மைமேல் உகரம், உறுவணுதநையும்
தொடர்மொழிப் பின்னும் நெடில்பின்னுமே (வீர—2)

தொடர் நெடில்கீழ் வன்மை உகரம் குன்றும் (நேமி—4

நெடிலோ டாய்தம் உயிர் வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே (நன்—94)

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் என்மனர் ஆயுங்காலே (இலக்—16)

தனிக்குறில் அல்லவற் றிறுதி வன்மை
ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப
தொடர்உயிர் உக்குறள் துடைத்துணும் (தொ-வி—15)

முத்துவீரிய ஆசிரியர் தொல்காப்பிய நூற்பாக்களையே எடுத்துக்கொண்டுள்ளார்

இவர் யாவரும் குற்றியலிகரம் உகரத்தின் விகாரமெனவே கொண்டுள்ளமை இவர்தம் நூற்பாக்களால் புலனும்.

இனி இறுதியாக உள்ள முப்பாற்புள்ளி என்னும் ஆய்த எழுத்தைப் பற்றிக் காண்போம்.

வேண்டுகோள்.

தமிழ்த்தாயின் தண்ணருளால் நமது பொழிலின் ஐம்பத்து நான்காம் துணர் முதன் மலர் இன்று வெளிவருகின்றது. இப்பொழிலின் ஆக்கம் கருதி, உரிமை அன்புடன் கட்டுரைகள் எழுதியும், உறுப்பினராகி பொருளுதவி செய்தும் வரும் அன்பர்கட்கெல்லாம் எமது நன்றியறிவினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நமது பொழில் வெறும் ஊதியம் ஒன்றே கருதி வெளிவருவதன்று. தாய்மொழியின் பல்வகைச் சிறப்புக்களையும் எடுத்துக்காட்டி மக்கட்கு மொழிப்பற்று, மொழிப்புலமை உண்டாக்குவதும் போன்ற சீரிய கருத்துக்களுடன் செய்து வரும் தொண்டுகளை அறிஞர் உலகம் நன்கு அறியும் இன்னணைய தொண்டுகளில் தமிழ்ப்பொழில் முழு வளர்ச்சியும் உற்று நிறைவளம் பெறுதற்கு பொழில் அன்பர்கள் தத்தம் அன்பர்களையும் இதன் உறுப்பினராக ஆக்கித் தரவும் அன்புடன் வேண்டுகிறோம்.

கட்டுரை அருளிவரும் அறிஞர்களும், பெருமக்களும் தாங்கள் பேரருளை வளர்த்து வரவும் தத்தம் அன்பர்களை வேண்டி அரிய கட்டுரைகளை வழங்கச் செய்யவும் வேண்டுகிறோம்.

அபிராமி சமயம்

K. சோமசுந்தரம், B.A., B.L., தஞ்சை.

(துணர் ருரு, மலர் கஉ, பக்கம் 203 தொடர்ச்சி)

ஓசை உள்ளளவுந்தான் மனத்தை இசைவித்து வியப்பூட்டி உருக்கும் இனிமை இசைக்குளதெனினும், உள்ளுந்தோறும் உள நெகிழ்ச்சியினை யெழுப்பும் செவ்வியும் வீறும் இசைக்கு இசையாதது ஓர் குறைபாடாகும். வாழ்வில் எளிதே மறையக்கூடியது சித்திரத்தில் நிலைபெற்றிருப்பதை, 'சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை' எனக் கம்பர் இசைத்துள்ளாராதலின், இசையின் குறைவினை நீக்குவான் வேண்டி, பட்டர் தம் உள்ளக்கிழியில் அழகு வாய்ந்த அம்மையாரை தாம் கண்ட உண்மையாய இசை வடிவுக்கும் பயனுக்கும் உருவெழுதி அதனிலே மனம் தோய்ந்து அந்தரங்கமாய் பேசுகிற இயல் மொழியசக இசையையாக்கி வழிபட்டு மகிழ் வாராயினர் என்பது அபிராமி அந்தாதி பாக்களில் உணர்ந்து அறியப்படுதலான், அவர்வழி நாமும் நண்ணுதல் நன்று. இவ்வண்ணம் இசைக்கலையைத் தெய்வத் தன்மையோடு திகழ்ந்து மிளிருமாறு பயிலும் வகையறிந்தார், இசையின்ப வாழ்வோடு கூடிய பக்தி நெறி வலையிற்றலைப்படுவார், இத்தகைய பக்தி நெறியினை ஒழுங்கான முறையில் பயின்று, மெய்ப்பொருளைக் காணும் பொருட்டு அறிநெறியினைப் பின்பற்றினர்க்கு ஞானநெறி இயல்பாய் கைகூடுவது தேற்ற மென்பதற்கு அபிராமி சமயம் உறுதியளிப்பது. அச்சமயச்சார்புடையார் மனத்தில் பதிப்பிக்காமற் போகிறதன்று, இசையினை எம்மொழியிலும் இசைத்துப்பாடின்: எந்தவகை மக்களும் அதனைச் சுவைத்து ஓரளவிற்கு இசையின் ஓசைவழி பொருளை உணர இயலும். அஃதே போன்று, அம்மை இசை வடிவாய் நின்று பல் வகை மக்களும் உணர்ந்து கொள்ளும் பெற்றிமையினை பெற்றுள்ளாள் என்பது போதரும். இதன்வழி மன வாக்கிற் கெட்டாத இறைவி மக்களின் இன்னிசையினைக் கேட்ட அளவில் எளிதே வந்து அருள் புரிவாளென்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளற்பால தொன்றேயாகும்.

உலவாப் பெரும் பொருளாம் மெய்ப்பொருட் சக்தியினை அறிவுக்கு அப்பாலாய் நிலையிற்கண்டுணருங்கால், அஃது எல்லையற்ற அன்பொடு மருவிய ஆற்றலுக்கு உறைவிடமாய்த் தோய்ந்தும் தோயாதும் அமைந்து நிற்றலைப் புலனுக்கும்- இத்தகைய ஆற்றலை உரை வரம்பிற்குட்படுத்தி அறிந்து வாழும் அழகின்பநெறி யாதெனின் அதுதான், 'நான்' என்பதிலிருந்து பிரிவுபட்டு மெய்மறந்து மனதை ஒருமுகப்படுத்தி, மனத்துறவால் மெய்ப்பொருட் சக்தியோடு ஒன்றித்து விடுதல் மனம் சக்தியின் சிந்தனையில் ஒன்றுபட்டு நிற்குங்கால் உடலமும் இறைவியின் பேராற்றலுக்கு உயப்பட்டுத்

தானாக நிலை பெறுகிறது. இறையுணர்வு மெய்ஞ்ஞானத்தால் வளர வளர, உடலுணர்ச்சி படிப்படியாய் குறைந்து வர, உள்ளம் ஞானத்தின் அறுதிப்பயனாய நிலையினை அடையும் பேறுபெறும். இத்தகைய நிலையினையும் பேராற்றலையும் வாய்ந்த அரிய பெரியார் உலகத்தாரால் உணர்தற்கு அரியதாகும். இம்முறையில் புறத்தே ஞானத்தாலும், அகத்தே பக்தியாலும், சித்தமிசை உறையும் அறிவான இறைவியை ஆராதித்து அடைவதைக் கடைபிடித்து மக்களை ஊக்குவிப்பது அபிராமி சமயமாகும்,

இறைவியின் பேராற்றலை வெளிப்படுதற்குரிய ஓர் கருவியாக பட்டரது உடலும், உள்ளமும் ஆவியும் ஒருங்கே அமைந்துள்ளதிருந்தன். இறைவியின் ஆற்றலைப் பட்டரது வாய்மொழி வழி கரணுவம் ஊனும் உறக்கமும் நீத்து சடப்பொருளையும் வென்று' உண்டி, உடையென உகந்தோடும் தண்டலத்தோரோடும்கூடாது. ஏககாலத்தில் அன்னையாகவும் மன்னியாகவும் ஏகத்துவமாய் யாண்டும் இறை மாட்சியுடன் இலங்குப் இயற்கைத் தாயாய சக்திபால் (Mother Nature is a power, a god head) ஒன்றுபட்ட உள்ளத்தராய் விளங்கும் பட்டர் ஒரு சக்திமான் என்பதை அறிகுதும். முத்தொழில் புரியும் இறைவியின் ஆற்றலைப் போற்றும் அளவுக்கு மக்களின் அறிவு வளர. அவ்வாற்றலை ஒரோவழி விளக்குவான் வேண்டி, பட்டர், உலகியல் நடைபெறுதற்குரிய ஆண் பெண் தத்துவத்தை. இறைவனும் இறைவியும் இயைந்து இலங்கும் இயல்பினில் புகுத்தி இறையாற்றலின் உண்மையினையும் அருளையும் நிலைநிறுத்தியுள்ளார். ஒத்த காதலிருவரன்றி வீடு அமையாது என்பது தேற்றம். இத்தேற்றக்குறிப்பு இருமைக்கும் பொதுவாதலும் உணர்ந்துகொள்க காமனைக் காய்ந்தும். காம இச்சைகளை எரித்தும் முற்றத் துறந்த தவக்கோலத்தில் தழல் வடிவாயிருந்த இறையைத் தன்னடக்க இயல்பொடு தன்வயமாக்கிக் குளிரச்செய்து. அவரது இடப்பாகத்தைத் தமக்குரிமையாக கவ்வித்தழுவிக்கொண்ட ஆற்றலைப் பட்டர் விளக்கியுள்ளார். அம்மை இறைவனைத் தழுவவே. இறைவன் குழைந்ததால், சக்தியின் வெல்லும் ஆற்றல் ஒரோவழி புலப்படும்.

இடங்கொண்டு விம்மி இணைகொண்டிறுக்கி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கைமலை கொண்டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

மற்றும் காமனை சினத்தால் நீறுக்கி தன்னளவில் வென்ற இறைவனது வெற்றி பல்லுயிர்கள்பால் முழுமையாகாதவண்ணம், உலகியல் இயல்பாக நடைபெறவும், பல்லுயிர்க் குலங்கள் என்றும் மறையாமல் நிலைத்து நிற்கவும், தனக்குத் துணையாகிய இரதிக்காக, அவளது கணவனாகிய மன்மதனை இழக்காதவாறு, காமன் அழியாது கரந்து நிற்கும் நிலையை இறைபால் வேண்டி இறைவி நல்கும் அருளாற்றலைப் பற்றி,

அதிசயமான வடிவுடையாளரவிந்த மெல்லாம்
துதி சயவானை சுந்தரவல்லி துணையிரதி
பதி சயமான தபசயமாக முன் பார்த்தவர் தம்
மதி சயமாகவன்றோ வாமபாகத் தைவவ் வியதே' (17)

என விளக்கி, இறைவி இறையை வென்ற பண்பினை பட்டர் தெளிய வைத்துள்ளார். அன்பர்க்காக இறைவனது இடப்பாகத்தைக் களித்துக் கலந்து கொண்ட வல்லபம் மிக்குடைய அபிராமியம்மை, காமநோயினைத் தணித்து, காமநெறியினை விழிப்புடன் காத்து, காதற்கசிவின் மங்களவடிவாய், மகிழ்ந்த நிலையும் எளிதே பெறப் படுகின்றது, இதன் வழி காமத்தை முழுமையும் வெல்ல இயலாத தன்மை புலப்படலாயிற்று. இறையின் ஒப்புதலின்றி உரிமையொடு அவரது இடப்பாகத்தை, ஞானவுருவுடைய இறைவி வவ்வியச் செவ்வியிலிருந்து, இறைவியின் அருளை இடைவிடாது நயப்பவர் காமனை வெல்லும் விறலும் வீறுமுடையராவரென்பதும் புலப்படும் காமத்தை எளிதாக அடக்க நினைத்தல் அறிவீனமாதலால், அபிராமி சமயம் காம உணர்வினை ஒழித்தற்கும் காம நசையை நசித்தற்கும், அம்மையின் சீரடிக்கே சாரும் மெய்த்தவ நல்லாரது இணக்கத்தை வற்புறுத்துகிறது: மற்றும் ஐம்பொறிக் காட்சியின் மனநோக்கினைக் கைவிட்டு, ஞானக் காட்சிக்குத் தோன்றும் நிலையிலிருந்து கொண்டு தன்னை நோக்கி ஆன்மாவாகக் காணும் தளராத முயற்சியும், புறத்தே தனிமையினைக் காணுது அகத்தில் தனிமையினைக் கருத்தாய் காண்பதுவையும் வலியுறுத்துகிறது. அறைவிபால் தம்மை முற்றிலும் ஒப்புவித்து தான் அவளது உடைமையென்ற நிலையில் வைகுதலும் எளிய சிறந்த சாதனமாக அபிராமி சமயம் புகட்டுவதால், அச்சமயம் பெருவாழ்விற்குரிய ஆத்மீக வளர்ச்சிக்கு அழகினையும் ஆற்றலையும் உண்டுபண்ணும் உயிர்நாடியாகப் பெரிதும் பயன் படுதல் காண்க. இதன்மூலம் பட்டர் காமத் துறவிற்கும் ஞானத் திற்கும் அரண் செய்யும் சிவசக்தி நெறியினைப் புலனாக வைத்தார். மற்றும் இந்நெறியின் வழி, உலகியல் வாழ்வை மலரச் செய்

யும் வகையில், கணவருடன் நட்பொடு கூடி வாழ்ந்து காதல் அன்பை அமைதி நிலையில் வளமுடன் வளர்ப்பது பெண் பிறவியின் விழுப்பமாகுமென்பதையும் உணரவைத்தார்,

இங்கொன்று கூர்ந்து அறிந்து கவனிக்கற்பாற்று. முன்னொரு காலத்தில் சிவபக்தி நெறியுடைய பிருங்கி முனிவர், முத்திபெறும் விழைவால், இறைவியை நீக்கி இறைவனை மட்டும் வண்டுருவங் கொண்டு வலம் வருதலைக் கண்ட இறைவி, இறைவனைப் பிரியா திருக்க, தவம் வேண்டி இயற்ற, தேவியாரது தவத்துக்குப் பெரிதும் இரங்கித் தமது இடபாகத்தை இறைவன் விரும்பியளித்து உமையாளொடு ஒன்றும் கோலம் கொண்டாரெனப் புராணம் கூறும் இவ்வழக்கினை மாற்றி, பட்டர், சக்தியின்றிச் சிவமில்லை யென எடுத்துக்காட்ட, இறைவி அன்பர்க்காக இறைவனது வாமபாகத்தை வவ்விய வன்மையும், ஆற்றலையும், சக்தி வழி பாட்டின் ஏற்றத்தையும் சுட்டிக்காட்டி அபிராமி சமயத்தின் பாதுகாப்பும் பண்பினையும் மாண்பினையும் சான்றுடன் விளக்கியது, கூர்ந்துநோக்குவார்க்குப் புலனாகும், எனவே, அபிராமி சமயம் பெண்ணுலகுக்கே புதியதோர் புனிதம் பிறப்பித்த வகையினைக் காண்க,

அபிராமி அம்மையின் ஆற்றலை சிந்தித்து அறியும் ஞானப் பேற்றினை வாய்ந்த பட்டர், மத வெங்கட்கரியினது தோலை இறைவெம்மையுறவுரித்துப் போர்த்தியபோது, (யானைத் தோலைப் போர்த்திக் கொண்டோர் சடுதியில் மரணமெய்துவரென்பது வழக்காறு) அஞ்சின இறைவி மிக்க விரலோடும் வல்லபத்தோடும், உண்மை வீரத்தோடும், அவரைப் பொருந்தி உலகுய்ய மங்கலையாய் அணைந்த ஆற்றலையும் சிறந்த ஆளுமையும் வியந்து பாராட்டி

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோ கனகச்
செங்கைக்கரும்பு மலருமெப் போது மென் சிந்தையதே (62)

எனச் சுட்டிக் காட்டி தெளிவுபடுத்தியது உணர்க.

மார்க்கண்டேய பாலர்க்காக அவரது இறப்பைத் தடுக்க, காலனை தன் குதிரை கழலாற் குமைத்த ஞான்று இறைவியும் இறையின் வாமபாகத்தில் வேறல்லராய்ச் சார்ந்திருந்தமையால் இறைவியும் இறப்பை தடுக்கும் அருளாற்றலுடையாள் என்பது போதரும், இதனை 'இறைவரும் நீயும் × × வந்து, வெவ்வியகாலனென்மேல் வரும் போது வெளி நிற்கவே' (18) எனவும் 'நின்குறிப்பறிந்து மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி' (76) எனவும் பட்டர் நயம்

பட பகர்ந்தது சிந்தித்துணரற் பாற்று. மற்றும் இறைகாலனை உதைத்தருளன்று, மரணமிலாப் பெருவாழ்வை அடைய இயலும் திருவடிஞானத்தை மார்க்கண்டேயருக்கு நல்கியது போன்று தனக்கும் அவ்வாறே அருள வேண்டுமென விரும்பும் திறம் உணரற் பாலது.

இறைவன் காமனை விழியால் எரித்தபோதும் காலனைக் காலால் எற்றுதல் போதும், அன்பர்க்காக இறைவிவிரும்பி அருளாற்றலைப் புரிந்த வகை எளிமையாகப் பெறப்படுவது காண்க. எனவே காலனையும் காமனையும் வென்ற இறைவி மக்களுக்கு மரணத்தையும் காமத்தையும் அகற்றி அன்னை உய்விப்பதில் வியப்பில்லை எனக் கண்டு கொள்க. மற்றும், மாலும் அயனும் நான் மறையும் வான வரும் தேடற்கரிய அம்மையாரது திருவடி [74] வாழுமுயிர்களது பிறவித் துன்பத்தைப் போக்கும் தனையடியாகும். வாழும் மக்க ளுயிர்கள், காலனுக்கும் காமனுக்கும் ஆட்படாமல், இறைவனின் அருளை எளிதில் பெறற்கு, இறைவி இறைவனது இடப் பாகத் தைத் தனக்கே உரிமையாகக் கொண்டு ஆற்றலுடன் இறைவனை ஆட்படுத்தியதை வேதமொழியர் தம் அந்தாதியில் புலப்படுத்தி யதின் மூலம், தூய அன்பு [Love] உண்மையினை [Truth] அரவ ணைத்தல் இல்வழி பிறவா நெறியினை அடைதல் இயலாதென்பதும், இறைவியின் வழி இறையருளை எளிதே எய்தலாமென்பதும், அபிராமி சமயம் வற்புறுத்தி உணர்த்துவது. அச்சமயத்தின் தனிச் சிறப்பாகும். எனவே, அபிராமி சமயம் செறிவு தெளிவு எனும் இயல்புகளுடன் வாழ்வியலின் இன்ப அமைதித் தத்துவத்தை ஒரு நெறிப்பட முறைப்படுத்தி, திட்ப நுட்பமாய் அன்புடன் பொருந்தும் உண்மையின் இணைப்பு நிலையை (Synthesis of Truth) தெரித்துக் காட்டுவதில் வல்லதாய் இணையற்றுத் திகழ்வது உளங்கொளத் தக்கது.

மக்களுயிர்களுக்கு மெய்க்கருணையாகிய முதல்வி, மலமறைப்பை நீக்கி எளிதில் திருவருள் பாலிக்கும் ஆற்றலை அறிமுகப்படுத்தும் பொருட்டு பரவும் பாடல்களின் வழி, காஞ்சி, மதுரை [57] முதலாய வரலாற்றுச் சான்றுகளைக் காட்டி, அபிராமி அம்மை, பல்வகைச் சக்தி வேறுபாடுகளுடன் [50-57] பல்லுயிர்களுக்காக பொதுமையில் இன்பமயமாய உருக்கொண்டு இடங்கள் பலவற்றில் வீற்றிருப்பாள் என்பர் பட்டர், 'அருளது சக்தியாகும் அரன்றனக்கு' ஆதலின் இறைவி இறைவனுடன் மக்களுயிர்களை ஆட்கொள்ள, மறைகள் கையெடுத்தார்க்க, சிறப்பாக கடவூரே தனக்குரிய இடமாகக் கொண்டு ஆங்கு வந்து போய் அருளும் பாங்கிற் பெருமையினைப் பட்டர் வியந்து பாராட்டியுள்ளார்: மற்றும் ஆங்கே, அம்மை

அமுதத்தை வழங்கி அருளியதை 'விண்மேவும் புலவருக்கு விருந்தாக வேலைமருந்தானதை நல்கும் மெல்லியலே' என பெருமிதத்துடன் மொழியலுற்றார்: மற்றும் அபிராமி பட்டர், வட்ட முக்கோணம் மருவிய எந்திரத்தில், மந்திர உருவாக, அமுதிடைச் சுவையென அமர்ந்து அறிவு - ஆனந்த ஆற்றலுடன் எந்திரத்தை இயக்கி மக்களை, சிவஞானம் பெற ஆட்கொள்ளும் ஒளிமயமாய இறைவியாகவும் வயங்குவாள் என தன் அனுபவ முறையில் செப்பி மகிழ்வுறுத்துவாராயினர்,

'இறையருந்திய நஞ்சினை அமுதாக்கிய அம்பிகை,' என பட்டர் பகருவதால், தீங்கினைப் போக்கி இடாகற்றும் அம்மையின் அருட் பண்பாற்றலைப் பொதுப்பட குறிப்பித்து, இறைவனை வயப் படுத்தி இறைவியருளும் ஆற்றலின் திறங்கள் வழி, மக்களுயிர்கள், மல நீக்கமும் சிவப் பேறும் எய்திட இறைவனது அன்பையும் அருளையும் பெற இயலும் வகைகளை வற்புறுத்தி, பட்டர் மக்கட் பொருட்டு இறைவி விழுத்துணையாய் வலியவந்து நலிந்து ஆட் கொள்ளும் ஆற்றலின் தன்மையினையும் விளங்க வைத்து புலப்படுத்தியது அருமைப் பாடுடைத்து, அதன் வழி மக்களுயிர்களை உய்யக் கொள்கின்ற நெறியுடன் புரையற்ற முத்தியின்பப் பேற்றில் சேர்ப்பது, சத்தியோடு கூடிய சிவம் என்பதனையும் பட்டர் மெய்ப் படுத்தியுள்ளார். முத்தி நெறியினை உள்ளவாறு யறிந்து, முத்தியினை அடைவிக்கும் நிலையினை, அபிராமி சமயம் மயக்கமற கூறுவதினுன் இந்நிலையின் மிக்கதொரு முத்திநிலை பிறிதில்லை யென்பது கண்கூடு, மற்றும் சத்தி, தழைக்கும் சிவமாகவும், சிவஞானமாகவும் இருந்து தாய்மைக்கு இடமாய் உயிர்க்கு இன்பம் ஊட்டி வழங்குவது **ஆண்டாளென்பதும்** அதனைப் பெறுவது அடிமையின் இயல்பு என்பதையும் பட்டர் வலியுறுத்தி, இன்புறும் அடிமை, இன்புறுத்தும் **ஆண்டாளைச்** சார்ந்து பக்தி அன்பால் பணி செய்தலே பேறு என்பதையும் முடிவுகட்டியுள்ளார், இதனுன் ஆண்டாள் அடிமைத் திறத்தில் ஒரு மோகம் இறைவிக்கு அமைந்திருக்கிறதை, அபிராமி சமயம் புதுமைப்படச் சாற்றுதலால் தெளியப் படவே, தமிழ் நெறிபற்றிய மரபே, அந்தாதி ஆசிரியருக்குரிய சமய மரபாக விழுப்பங்கொண்டு விளங்குதல் காண்க. எனவே ஆண்டாள் அடிமைத் திறத்தை விளக்குவது, அபிராம சமயச் சிறப்புண்மைகளில் ஒன்றெனத் துணிதல் சால்புடைத்து.

சாலையார் மேற்கொள்ளும் அங்கதப் பாட்டு ஆராய்ச்சி

கேலியும் கிண்டலும் குத்தலும் சாடலும் கலந்த நடையில், தனிமனிதர்களின் குறைகளையும் சமுதாயச் சீர்கேடுகளையும் எடுத்துக்காட்டி இடித்துரைப்பது அங்கதப்பாட்டு. அங்கதப் பாட்டு வகைக்கும் தமிழ் இலக்கியத்தில் நீண்ட வரலாறு உண்டு. கவி காளமேகமும் இரட்டைப் புலவர்களும் சில சித்தர்களும் அங்கதத்தை ஒரு தனிக் கலையாகவே வளர்த்து வந்துள்ளார்கள், இந்த வரலாறு, தமிழ்க் கவிதையில், வற்றாமல் தொடர்ந்து வருகிறது. இன்றைக்கும், தமிழ்க் கவிஞர்கள், (குறிப்பாக) கவியரங்குகளில், அங்கதத்தை மிகவும் தளினமாகக் கையாண்டு வருகிறார்கள்.

என்றாலும், தமிழ் இலக்கியத்தின் வேறுபல துறைகளில் போலவே, அங்கத இலக்கியத் துறையிலும் ஆழ்ந்து அகன்ற ஆராய்ச்சிகள் இன்னும் நடைபெறவில்லை. இந்தக் குறையைப் போக்கும் நோக்கத்துடன், தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் (டாக்டர்) சாலை இளந்திரையன் அவர்களும் அவருடைய துணைவியார் டாக்டர் சாலினி அவர்களும், '' தமிழில் அங்கதக் கவிதை '' என்னும் தலைப்பில் ஓர் ஆராய்ச்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள். பல்கலைக் கழக மானியக்குழுவும். இந்த ஆராய்ச்சிக்குச் சிறிய அளவில் பொருள் உதவி செய்ய முன்வந்துள்ளது.

சாலையார், தங்கள் 1980 மே, ஜூன், ஜூலை தென்னகச் சுற்றுப் பயணத்தின் போது தமிழகத்தின் பல இடங்களிலும் உள்ள கவடிச் சாலைகளில் இந்த ஆராய்ச்சிக்குத் தேவையான செய்திகளைச் சேகரிப்பார்கள்; ஆங்காங்கு உள்ள அறிஞர்களின் கருத்துக்களையும் திரட்டித் தொகுப்பார்கள். ஆயினும், தமிழர் இல்லந்தோறும், இதயம் தோறும், பரவிப் படர்ந்துள்ள அங்கதக் கவிதைக்குரலை ஒருங்கு திரட்டுவது அவ்வளவு எளிதல்லவே. எனவே, சாலையார், உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களின் இனிய ஒத்துழைப்பை விரும்பி வேண்டுகிறார்கள்.

உங்கள் உங்கள் பகுதிகளில் வழங்கும் அங்கதப் பாடல்களில், உங்கள் கவனத்துக்கு வந்தவைகளை, முழு விவரத்துடன் அவர்களுக்கு எழுதுங்கள். அங்கதப் பாடல்களைப் பற்றிய ஆராய்ச்சி ஏடுகள் / கட்டுரைகள் வெளிவந்திருந்து, உங்களுக்கு எளிதாகக் கிடைத்தால் அவர்களுக்கு அனுப்புங்கள்; அல்லது, அவர்கள் வாங்கிக் கொள்வதற்கு வசதியாக, அவைகளைப் பற்றிய விவரங்களை அவர்களுக்குத் தெரிவித்து உதவுங்கள், எல்லாவற்றுக்கும் பின்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

முனைவர் சாலை. **இளந்திரையன்,**
9-ஏ/7, டபிள்யு. இ. ஏ,
கரோல்பாக்,
புதுதில்லி - 110 005.

எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரால் தமிழ்க் கொலை செய்யாதீர்?

(திருத்துறைக்கிழார்)

தமிழ் மொழியின் சிறப்பையுணர்ந்த பண்டைத் தமிழ்ப் பேரறிஞர் பலரும், அதனை ஒண்டமிழ், செந்தமிழ், தனித்தமிழ், தண்டமிழ், தீந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், உயர்மொழி, தனி மொழி, செம்மொழி, முன்மொழி, முதல்மொழி எனப் பலவாறு பாராட்டிப் போற்றியுள்ளனர்.

தமிழ் நெடுங்கணக்கெழுத்துக்கள் 31-ஆக இருக்கவும் சிலர் 247 என்று பொய்ப்பொழிவு செய்கின்றனர்.

தொல்காப்பியம்

எழுத்தெனப் படுப,
அகர முதல நகர இறுவாய்
முப்பஃ தென்ப;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.

என்று தான் கூறுகிறது.

247 ஏன்ற கரணியம், உயிரெழுத்து, மெய்யெழுத்துக்களை தனித்தனியே எழுதவேண்டிய இடர்ப்பாட்டைப் போக்கி எளிதாக் கவே உயிர்மெய்கள் ஆக்கப்பெற்றன. இதன் விளக்கம் பொழிலில் முன்னரே வெளிவந்துள்ளது.

கேட்பவரை அச்சுறுத்தும் வகையில் தமிழ் எழுத்துகள் 247 எனக்கூறித் திகைக்கவைக்க வேண்டாவெனத் தமிழ்ப் பெருமக்களை வேண்டிக்கொள்கிறோம். உண்மையை விளக்கி உவகையுறச் செய்வீர்களாக.

பண்டைத் தமிழர் பலமாற்றங்களைத் தேவைக்கேற்ப, அவ்வப் பொழுது செய்து, நிலையாகச் செம்மையாக அமைத்து, உயர்தனிச் செம்மொழியாக்கியுள்ளனர். இடையிடையே தேவையற்ற மாற்றங் களைச் செய்து மொழியைக் குழப்பத்துக்குள்ளாக்கி, தமிழ் பயிலு வதில் இடருண்டாக்கி, கற்க விழைபவரை மலைப்புக்குள்ளாக்குவது எழுத்துச் சீர்திருத்தமாகாது. மாறாக மொழிக் கொலையாகும்.

எழுத்துப் போலி என்னும் பகுதியில்,

அகர இகரம் ஐகார மாகும்,
அகர உகரம் ஔகார மாகும்
அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
அகரத் திம்பர் வகரப் புள்ளியும்

ஐ ஔ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்;
என்கிறது தொல்காப்பியம்,

எனவே, 'ஐ' யை 'அஇ' 'அய்' என்றும்
'ஔ' வை 'அஉ' 'அவ்' என்றும் எழுத்துப்

போலிகளாக எழுதலாமென்று கூறியுள்ளவற்றையே ஐ, ஔ-க்கு மாற்றாகப் பயன்படுத்தவேண்டுமென்று ''போலிகள்'' ஒருகாலில் நிற்கின்றன.

மற்றும் சிலர் உ, ஊ ஒலிகளுக்கு அடையாளமாக, ¬, ೨, என்னும் குறிகளையிடலாமென்கின்றனர். மேலும் சிலர் வேறு வேறு வகையாக எழுதலாமென்றும் திருத்தங்கூறுகின்றனர்.

இவர்கள் விரும்பும் எழுத்துச் சீர்திருத்தம் தட்டச்சுக்கும், அச்சுக்கோப்புக்கும் எழுத்துகளைக் குறைக்கவும், பயில்வார்க்கு எளிதாக்கவும் என்கின்றனர்,

ஏன் ? இப்பொழுது தட்டச்சும், அச்சிடலும் நடைபெறாமலா போய்விட்டன ? மேலும் பல திருத்தங்கள் செய்து பண்டைத் தமிழ் நூல்களைப் பயில விழைவார் புரியாதிடருறவா ? என அறிகிலேம்.

ஈ, வே, இரா, பெரியாரவர்கள் பகுத்தறிவுக்கொத்த வகையில் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய விரும்பி 'விடுதலை'யில் எழுதினார், தாம் எழுதிய நூல்களிலும் அம்முறையைப் பின்பற்றினார்.

ஆனால், 'விடுதலை'யை 'விடுதலய்' என்றும், 'முனைவரை' 'முனய்வர்' என்றும், 'இளைய' என்பதை 'இளய்ய' என்றும் 'துரை' என்பதை 'துரய்' என்றும் பிறவாறும் எழுதி மக்களைக் குழப்பவில்லை,

தமிழக அரசு தமிழ்ப் பேரறிஞர் பலரின் வேண்டுகோளுக்கு இணங்கி ஐ, ஔ என்னும் போலிகளாகிய 'அய்' 'அவ்' மாற்றங்களைக் கைவிட்டது.

ஆனால், ''போலிகள்'', அத்துடன் அமையாது போலி மாற்றத்தை வலியுறுத்துகின்றனர்; அரசு அஞ்சிவிட்டதாக ஏளனம் செய்கின்றனர்; தம் ஏடுகளில் போலியெழுத்துகளில்தான் எழுதுகின்றனர். மாநாடு கூட்டித் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புகின்றனர்.

இக்காலத்தில் ஏதாவது ஒரு நூலைப்பற்றியாய்ந்தும், ஒரு பொருள்பற்றியாராய்ந்தும் எழுதி முனைவர் (பர்) பட்டம் எளிதில் பெற்றுவிடலாம். அங்ஙனம் முனைவர் (Dr) பட்டம் பெற்றவர் யாவரும் மொழிப் பேரறிஞரென்றோ, மொழிநூல் வல்லுநரென்றோ கருதிவிடக்கூடாது. முனைவர் பட்டம் பெறாத பலர் தூய தமிழறிவும், மொழி நூலாய்வும், சொற்பிறப்பியல் ஆய்வும் உடையவர்களாயிருக்கின்றனர் என்பதையும் நாம் ஆய்வோம்,

அரசு தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய விரும்பினால் முனைவர் பட்டம் பெற்றவர்களை மட்டில் கலந்து செய்யாது மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் போன்று தூய தமிழறிவும், தமிழ்ப்பற்றும், மொழி நூலாய்வும் உள்ள நற்றமிழறிஞர்களைக் கொண்ட 'தமிழாய்வுக்குழு' ஒன்றமைத்து அதன் ஒப்புதலின்பேரில்தான் மொழிபற்றிய எந்தச் சீர்திருத்தமும் செய்தல் வேண்டும்,

'ஐ' ஒரெழுத்து மட்டுமன்று, ஓரெழுத்தொரு மொழி; பல பொருள் ஒருசொல்; இரண்டாம் வேற்றுமையுருபு; உயிர்நெடிலுமாம்' தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பலவிடங்களில் எடுத்தாளப் பெற்றுள்ள ஓரெழுத்தொருசொல்.

'ஐ' என்னும் சொற்கு அரசன், அழகு, ஆசான், கடுகு, சருக்கரை, சந்நி, தும்பை, துர்க்கை, நுண்மை, மருந்து, பெருநோய், இருமல், தலைவன், கடவுள், குரு, கோழை, கணவன், வியப்பு, சவ்வீரம், சிலேட்டுமம், சிவன், சாமி, தந்தை ஆகியன இப்பொருள்களில் கையாண்டுளர்.

ஐ, ஒள இரண்டையும் அய் அவ் என மாற்றுவதன் வழி ''இவர்கள்'', அடைய விரும்பும் பயன் யாதோ ? தட்டச்சும் அச்சிடுதலும் இதனால் தடைப்பட்டுவிட்டனவா? ஏன் இப்பிடிவாதமோ?

ஐ, ஔ மாற்றத்தால் தமிழ்மொழி சீர்கெடும்; தமிழ் பயில்வார்க்குத் தடுமாற்றமுண்டாகும்; இலக்கியம் இடர்ப்படும்.

இப்போலியர் முயற்சிக்கு அரசும், தமிழறிஞரும் இடமளிக்காது தமிழ்க்கோவைக்குத் துணை செய்யாதீர் எனப் பணிவுடன் வேண்டுகிறோம். ஆமென்,

---

தமிழ்நாட்டுத் தமிழர் பேரவை

மூன்றுவது மாநில மாநாடு.

அன்புடையீர் ! வணக்கம்.

பேரவையின் மூன்றுவது மாநில மாநாடு 4-5-80 ஞாயிறு காலை 9-15 மணிக்கு பொள்ளாச்சி தொழிலதிபர்,

உயர்திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் கோயமுத்தூரில் மேட்டுப்பாளையம் சாலை, பூ மார்க்கட் அருகிலுள்ள தேவசங்கர் உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

மாநாட்டில் தற்காலத் தமிழகத்தின் நிலை, கல்வி, கைத்தொழில், வர்த்தகம், வேளாண்மை, மருத்துவம், மொழி, நீதி, பண்பாடு ஆகியவைகளை ஆராய்ந்து தகுந்த முடிவுகள் எடுக்கப்பெறும்.

ஆகவே, தாங்கள் குறித்த நாளில் குறித்த இடத்தில் குறித்த நேரத்தில் வந்திருந்து தங்கள் கருத்துக்களைக் கூறி நல்ல முடிவுகளைச்செய்து மாநாடு வெற்றிபெறத் துணைபுரியுமாறு வணக்கமாக வேண்டிக்கொள்ளுகிறேம்.

தாய்மொழி தமிழாக உடைய, 40 வயதுக்கு மேற்பட்ட, அரசியலில் பங்குபெறாத எவரும் மாநாட்டில் பங்குபெறலாம்.

மாநாட்டிற்கு கட்டணம் எதுவும் இல்லை.
உறுப்பினர்களுக்கு உணவு வசதி உண்டு.

தங்களன்பிற்குரிய,

திருச்சிராப்பள்ளி-8
9—4—1980

கி. ஆ. பெ. விசுவநாதம்,
பொதுச்செயலாளர்.

கு. தமிழ் நிலவனார்,
தஞ்சாவூர், துணைச்செயலாளர்.

யூ. கா. அ. மதியண்ணல்,
மதுரை, துணைச்செயலாளர்.

நா. பெ. வ. குருசாமி நாடார்,
திருச்சி, பொருளாளர்.

இரயில் நிலையத்திலிருந்து வருகிற பேருந்து எண் :— 11.